பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

யாழ்ப்பாணம்

# வலம்புரி
## VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்
துன்னாலை வடக்கு
கரவெட்டி.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை (05-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 351

★ அரசு - புலிகள் சமாதானப் பேச்சிற்கு உதவியாக

# விடுதலைப்புலிகள்மீதானதடையை நீக்க அரசு அதிதீவிர ஆலோசனை?

## ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவிப்பு!

(கொழும் விசேட நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசு முன்னெடுத்து வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முன்னோடியாக இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது விதித்துள்ள தடையை நீக்குவது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சிற்கு நல்லெண்ண சமிக்ஞையாக புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீககலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அமைப்பு என்றும், அவர்கள் பயங்கரவாதிகள் என்றும், பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்கள் கூறிவரும் அதேநேரத்தில் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையை எப்படி அரசாங்கம் ஆரம்பிக்கப்போகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குஇலங்கை அரசு விதித்துள்ள தடையை நீக்குவதுபற்றி ஜனாதிபதியுடன் தொடர்புடைய உயர் மட்டக்குழு ஆராய்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கினால், இயல்புநிலை திரும்பி மோதல் தவிர்ப்பு தானகவே ஏற்படும் எனவும். இதனால் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் இயல்பு நிலை ஏற்பட்டு சமாதானப் பேச்சிற்கு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நத்தார் தினத்திற்கு பின்பே 'எரிக்சோல்'இலங்கை வருவார்

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹைய்ம் நத்தார் தினத்தை முடித்துக் கொண்டு இலங்கை வருவாரென அரசியல் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவரின் வருகை பெரும்பாலும் அடுத்த ஆண்டுமுதல் வாரத்தில் இடம்பெறலாம் எனவும், கொழும்பு வரும் இவர் மீண்டும் வன்னிக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவர்ர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## இடைக்காலவரவுசெலவுதிட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கும்

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட விருக்கும் அடுத்த மூன்று மாதத்திற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிக்கவுள்ளது.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

இடைக்கால வரவுசெலவுத் திட்டம் இன்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸினால் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை அவசரகால நீடிப்பு மசோதாவும் இன்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்தரத்வத்தவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தமசோதாக்கள்மீதான விவாதம் 5ம் 6ம் 7ம் திகதிகளில் நடைபெற்று 8ம் திகதி வாக்கெடுப்பிற்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## படைக்கு ஆட்சேர்ப்பு கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான கால எல்லை இம்மாதம் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வருடத்தில் இடம்பெற்ற 6வதுகட்ட இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கான கால எல்லை கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும் திட்டமிட்டபடி படைக்கு ஆட்கள் சேராத காரணத்தினாலேயே இந்நீடிப்பு இடம்பெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

15 ஆயிரம் பேரை படைக்குத் திரட்டும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது4ஆயிரம் பேர் மட்டுமே

(8ஆம்பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[வவுனியா]

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த செப்ரெம்பர் மாதம் 3ந் திகதி இடம் பெற்ற மோதலில்

- 2ம் லெப் அகமகள் செல்லையா தயாநிதி [யாழ்ப்பாணம்]
- விபுலங்கா

(8ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் விடுதலை பகிஷ்கரிப்புகைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதன் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜாவினால் விடுதலை செய்யப் பட்டார்

பிரஸ்தாபமாணவன் கடந்தமாதம் 4ந் திகதி மந்துவில் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்

மாணவனின் விடுதலை தொடர்பாக கடந்தமாதம் 24ந் திகதி முதல் நேற்று வரை யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் முழுநேர, பகுதிநேர மாணவர்களும், யாழ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு விமானசேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெறவுள்ள இரண்டுவிமான சேவையில் பயணம் செய்வதற்கு இம்மாதம்1ம் ,2ம் திகதிகளில் விமானப் பதிவினைமேற்கொண்டபயனிகளும் 3ம் திகதி பயணப்பதிவு செய்தவர்களில் ஒருபகுதியினரும் அனுமதிக்கப்படுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது,

இவர்களை இன்று காலை பயண ஆயத்தங்களுடன் யாழ் புகையிரத நிலையத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது,

## லங்காமுடித்த பயணசீட்டு நாளை வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

'லங்கா முடித்த' கப்பலுக்கான பயணச்சீட்டுகள் நாளை வழங்கப்படுமென ரான் இணைப்பாளர் எஸ். குகராஜன் அறிவித்துள்ளார்.

சிற்றி ஒவ் றிங்கோ கப்பலுக்குப் பயண அனுமதி பெற்றவர்கள், கடந்த ஆகஸ்ட் மாதம் பாதுகாப்பு அனுமதி பெற்றவர்கள், நோயாளர்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள, அங்கு வேலை செய்பவர்கள ஆகியோருக்கே பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணச்சீட்டு பெறுபவர்களை யாழ்.புகையிரத நிலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்தின் தூதுவராக லயனல் பெர்னான்டோ

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னான்டோ நெதர்லாந்து நாட்டின் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு உதவலாமென்ற அடிப்படையிலேயே இவர் நியமிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சார்க் செயலாளராக கடமையாற்றி வரும் நிகால் றொட்றிக்கோ வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். (ந)

## சாவகச்சேரி கொலை மூன்று இராணுவத்திற்கு பிணை அனுமதி

(வவுனியா)

1998ஆம் ஆண்டு பொதுமகன் ஒருவரை சாவகச்சேரியில் வைத்து கொலை செய்தமை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினர் பிணையில் செல்வதற்கு வடமாகாண மேல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று இராணுவத்தினரின் சார்பில வவுனியாவில் இயங்கும் வடமாகாண மேல நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிணை மனுமீதான விசா

(8ஆம் பக்கம் பார்க்க)

# இந்து கிறிஸ்தவ ஆலயங்கள் புனரமைப்புக்கு 47 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

யாழ் மாவட்ட ஈ. பி. டி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களால் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இவ் வருடத்துக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 12 பிரதேச செயலர்கள் பிரிவுகளிலுள்ள 29 இந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்காக 36 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் 6 பிரதேச செயலர்கள் பிரிவுகளிலுள்ள 9 கிறிஸ்தவ ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இதனடிப்படையில், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இரு இந்துஆலயங்களும். யாழ்ப்பாணத்தில் ஒன்றும் நல்லூரில் ஒன்றும், சங்கானையில் ஆறும், சண்டிலிப்பாயில் மூன்றும், உடுவிலில் இரண்டும், தெல்லிப்பளையில் மூன்றும் கோப்பாயில் இரண்டும், கரவெட்டியில் இரண்டும், பருத்தித்துறையில் மூன்றும், நெடுந்தீவில் ஒன்றும் வேலணையில் மூன்றுமாக மொத்தமாக 29 இந்து ஆலயங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இரு கிறிஸ்தவ ஆலயங்களும் நல்லூரில்இரண்டும், சண்டிலிப்பாயில் ஒன்றும் கரவெட்டி, பருத்தித்துறையில் தலா ஒன்றும், நெடுந்தீவில் இரண்டுமா 9 கிறீஸ்தவ ஆலயங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இது இவ்விதமிருக்க சரவகச்சேரி, மருதங்கேணி, பளை பிரதேச செயலர் பிரிவுகளில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அவற்றுக்கு 2000 ஆம் வருடத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. (உ-77)

## வெண்டியில் வெண்குருத்து நோய்

(கல்வயல்)

வடமராட்சிப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட வெண்டிச் செடி வெண்குருத்து நோயின் தாக்கம் கண்டுள்ளது.

இமையாணன், அத்தாய், அல்வாய் போன்ற பகுதிகளிலும் மற்றும் வலிகாமத்தில் ஆவரங்கால், சிறுப்பிட்டிப் பகுதிகளிலும் புதிதாகச் செய்கைபண்ணப்பட்ட செடியில் வெள்ளைக் குருத்து நோயின் அறிகுறிதெரிகிறது.

பல வருடகாலம் இந் நிலங்கள் பயிரிடப்படாது இருந்தமையால் ஏற்பட்ட கிருமித் தாக்கம், நைதரசன் குறைபாடு, மாறுபாடான காலநிலை என்பன இந்நோய்த் தாக்கத்திற்கு அடிப்படைக் காரணிகளாகும் என விவசாயப் பகுதியினர் கூறுகின்றனர். (ச-111)


சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்

**விசேட பொதுக்கூட்டம்**

வணிகர் மன்ற அங்கத்தவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 08-12-2000ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கொடிகாமம வீதி கரவெட்டியிலுள்ள வரன்ற் கல்வி நிலையத்தில் [சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில்] நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாதுசமுகம்தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- **வணிகர்களின் நஷ்டஈடுகள் பற்றி ஆராயப்படவுள்ளது.**

**வ. இராஜதுரை**
கைத்தொழில் வணிகர் மன்றம் செயலாளர்
சாவகச்சேரி.



யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்

**ஸ்தாபகர் தினமும்**

**ஆரம்பக்கல்வி செயற்பாட்டறை**

**திறப்பு விழாவும்-2000**

காலம்: **05-12-2000 செவ்வாய்க்கிழமை**
**காலை 10 00 மணி**
இடம்: **பாடசாலை பிரதான மண்டபம்**
தலைவர்: **திரு. எஸ். கே. சண்முகலிங்கம்** அதிபர்

பிரதம விருந்தினர்:
உயர்திரு ப. விக்னேஸ்வரன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம்)

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் வி. சிவசாமி
(சமஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. சோ தில்லைநாதன்
(உதவிக்கல்விப்பணிப்பாளர், வேலணைக் கோட்டம்)

கௌரவ விருந்தினர்:
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
(தலைவர், வேலணை பிரதேச சபை)

ஸ்தாபகர் படம் திரை நீக்கம்:
பேராசிரியர் கா. குகபாலன்
(புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஸ்தாபகர் நினைவுப் பேருரை:
திரு. க. திருநாவுக்சுரக
(அமைப்பாளர், வடமாநில சர்வோதயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**அதிபர், ஆசிரியர், மாணவர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

விளம்பர அன்பளிப்பு:
**புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்**
(கி/1083)


# தொலைக் காட்சி பார்ப்பது தொடர்பாக சகோதரர்களுக்கிடையில் மனக்கசப்பு தற்கொலையில் முடிவுற்றது

(கொழும்பு)

தொலைக்காட்சி பார்ப்பது தொடர்பாக சகோதரர் மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு தற்கொலையில் முடிந்த சம்பவம் ஒன்று கொழும்பு புறநகர் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது; இளைய சகோதரன் நடைபெறவுள்ள க.பொ.த. (சாதாரண)தரப்பரீட்சைக்கு படித்துக்கொண்டிருந்த போது தமையன்மிகுந்த சத்தமாக தொலைக்காட்சி ஒலிபரப்பை இரசித்ததாகவும் இதனால் சகோதரர்இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இளைய சகோதரன் டோச்லைட்டால் தமையனைத் தாக்கியதாகவும் தமையன் வீட்டை விட்டு வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து இளைய சகோதரன் தனது தலையை சுவரில் மோதியதால் ஏற்பட்ட காயத்தால் மரணம் சம்பவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-க)

## இன்று உதைபந்தாட்டப் போட்டி

[அல்லைப்பிட்டி]

அல்லையூர் விழிப்புணர்வுக் குழுவினரால் நடத்தப்படும் சிநேகபூர்வ உதை பந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்று இன்று மாலை 3.00 மணிக்கு அல்லைப்பிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக கியூடெக் நிறுவன இயக்குநர் சி. ஜி. ஜெயக்குமார் கலந்து கொள்கிறார். [ச]

## ஆதாரம் காட்டி பெறவும்

(இருபாலை)

டச்சு வீதி கோப்பாய் தெற்கு பகுதியில் மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை யொன்று கண்டெடுக்கப்பட்டு அப்பகுதி சிவன் தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (இ)

## பணிகளை ..

வில்லை சேர்.பொன். இராமநாதன். ஆறுமுகநாவலர் ஆகியோர் விட்டுச் சென்ற பணிகள் மீண்டும் உத்வேகம் பெற வேண்டும் என்று கூறினார்.

கலைப்பீடாதிபதி. பேராசிரியர்.செ.பாலச்சந்திரன் அங்கு பேசுகையில்.

இன்றைய இளைஞர்கள்மத்தியில் சேர். பொன். இராமநாதன் பற்றிய அறிவுபூஜ்ஜியமாகவுள்ளது. அவரால் உருவாக்கப்பட்ட இந்தநிறுவனத்தில் கால்பதிக்கின்றநாம் அவரைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். நாம் தூற்றும் கலாச்சாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து போற்றும் கலாச்சாரத்தினை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்து நாகரிகத் துறைத் தலைவர். பேராசிரியர். ப.கோபாலகிருஸ்ண ஐயர் தமதுரையில் எமது மக்களது நல்வாழ்வுக்காகதங்களுடைய வாழ்நாளிலே மிகவும் சிறப்பாக திட்டமிட்டு சிலகாரியங்களைச் செய்தமைக்காக நாம் என்றென்றும் கைமாறு செய்யக்கடமைப்பட்டவர்கள். ஆகவே எங்களுடைய சைவப் பாரம்பரிய மரபுக்கு ஏற்பஅப் பெருமகனை எமது குருவாக ஏற்று நாம் போற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சேர். பொன் இராமநாதன்வேதாகமஆய்வு குரு குல சிறுவர்களின் வேத பாராயணமும் திருமுறை ஓதம் இடம்பெற்றன. அத்துடன் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. (க-77)

## விசேட வழிபாடு

(மிருசுவில்)

புனித நிக்கொலார் உற்சவத்தை முன்னிட்டு, மிருசுவில் புனித நிக்கொலார் ஆலயத்தில் இன்றும்,நாளையும் விசேட வழிபாடுகள் நடைபெற உள்ளன.

இவ்வாலய உற்சவ தினத்தை முன்னிட்டு சில்லாலை கதிரை மாதா ஆலயம், கரவெட்டி அந்தோனியார் ஆலயம் என்பனவற்றில் நாளைக் காலை திருப்பலிப்பூசை இடம்பெறும்.

கடந்த எட்டுமாத காலமாக இப்புனித நிக்கொலார் ஆலயம் எவ்வித வழிபாடுகளுமின்றி பூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மீண்டும் தபால் விநியோகம்

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி பகுதிக்கான தபால் விநியோகம் இம் மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளை அடுத்து பொது மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தினால் இப்பகுதிக்கான தபால் விநியோகம் சீரற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-110)

## வடமராட்சியில் தடகள விளையாட்டு

வடமராட்சி கல்விவலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கடந்த வாரம் தடகள விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையும் பெண்கள் பிரிவில் இமையாணன் அ.த.க. வித்தியாலயமும் வெற்றிவாகை சூடி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

வெற்றியீட்டியவர்களுக்கான வெற்றிக் கேடயங்களை வலயக்கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா வழங்கிக்கௌரவித்தார். (ச-27)

## இராசி பலன்

5.12.2000
(கார்த்திகை 20 செவ்வாய்)
நவமி மு இ. 7.52 வரை
பூரட்டாதி மு.ப.11.32வரை
ராகு காலம் 3.17 - 4.47
சுப நேரம் 10.47 - 12.47

**மேடம்**
சுப செலவு, பிரயாணம், காரிய தாமதம், சென்ற இடத்தில் செல்வாக்கு.

**இடபம்**
தனலாபம், குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு,கீர்த்தி.

**மிதுனம்**
தொழில் லாபம், பணியாளர் உதவி, காரியம் கைகூடும், அதிகாரம்.

**கடகம்**
பிரயாணம், கட்டுப்படுதல், வயிற்றுக்கோளாறு, மனக் கிலேசம்.

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், உடல் உபாதை, நல்ல உணவு கிடைத்தல்.

**கன்னி**
போசன சுகம்,வாகனவசதி, மதிக்கப்படுதல், தனவரவு.

**துலாம்**
சந்தோச மிகுதி, நோய் குணமடைதல், எதிரிகள் விலகுவர், தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
உஷ்ண வியாதி, மனச் சோர்வு, நினைத்த இடம் செல்ல முடியாமை, சுப செய்தி.

**தனுசு**
தாய்வழி உறவு, தன்நம்பிக்கைக் குறைவு,அபகீர்த்தி காரிய தாமதம்.

**மகரம்**
பிரயாணம், சகோதரர் உதவி, இனிய அனுபவம், முயற்சி கைகூடும்.

**கும்பம்**
தன விரயம், கௌரவக் குறை, காரிய தாமதம்,வீண் விவாதம்.

**மீனம்**
சிறந்த உணவு கிடைத்தல், சயன சுகம், உடல் நலம், கற்பனை மிகுதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## பிரிவுத் துயர் பகிர்வு

### சின்னக்குட்டி தியாகராஜா

(இளைப்பாறிய ஓவசியர்-யாழ்மாநகர சபை)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது நவாலியில்வசித்தவருமான சின்னக்குட்டி தியாகராஜா 03 ஆம் திகதி காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்; **சிதம்பரநாதன்** (மகன்)

### ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை 03-12-2000 அன்று காலமானார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்; **சகோதரர்கள்**

### செல்லப்பா கந்தசாமி

அராலி வடக்கைச் சேர்ந்த செல்லப்பா கந்தசாமி நேற்று (04-12-2000) காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்.

தகவல்; **கே தவபாலசுப்பிரமணியம்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஏழைமக்களின் வாழ்வை ஒளிபெறச் செய்த அப்பழுக்கற்றகூட்டுறவாளன் 'அமரர் வீரசிங்கம்'

> அமரர் வீரசிங்கம் ஒரு நடமாடும் கூட்டுறவுப் பல்கலைக்கழகம். அவர் கூட்டுறவால் சாதித்தவை ஏராளம். அவரின் கூட்டுறவுத் தன்மை காலத்தால் அழியாது.
>
> அமரர் க. கைலாசபதி

ஏழு தசாப்தங்களாக கூட்டுறவுத்துறையிலும் கல்வித்துறையிலும் தனது வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டிய பெரியார் வீரசிங்கத்தின் முப்பத்தியாறாவது நினைவு தினத்னை தயாழ். குடாநாட்டுக் கூட்டுறவாளர்கள் இன்று நினைவுகூறுகிறார்கள் கல்வித்துறையிலும்கூட்டுறவுத்துறையிலும். பல்வேறு பட்ட சாதனைகளை பல சோதனைகளின் மத்தியில் நிலைநாட்டி வெற்றி கண்டவர் அமரர் வீரசிங்கம்.

1947இல் பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் பிரவேசித்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்த போதும் மீண்டும் 1952இல் இதே தொகுதியில் போட்டியிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரான முதல்கூட்டுறவாளன் அமரர் வீரசிங்கம்.

பாராளுமன்றத்தில் தாய்மொழிக் கல்வி தொடர்பாகவும் ஆங்கிலக் கல்வி தொடர்பாகவும் தொழில் நுட்பக் கல்வியின் அவசியத்னதயும் 1952 ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கூறியவை இன்று நிதர்சனமாக அமைந்துள்ளது.

தாய்மொழிக்கல்வியை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் இவ்வாறு பேசி உள்ளார்.

''எமது நாடு சுதந்திரம் பெற்றநாடு. எங்களுக்கென்று சொந்தக் கொள்கை உண்டு. செயல்ரீதியில் கல்விக் கொள்கைகளைத் தயாரிப்பதை நான் வரவேற்கின்றேன். எங்களுக்கென்று ஒருமொழிக்

## கூட்டுறவாளன்

கொள்கையுண்டு எங்களுக்குத் தேவையானது என்னவென்றால் மொழியல்ல, கல்விதான், மொழிஎன்பது ஒரு தேசியக் கொள்கையாகும். பல்கலைக் கழகம் வரை மாணவர்களுக்குதாய்மொழியில் கல்வி போதிப்பதை மிகவும் விரும்புபவர்களில் நானும் ஒருவன். ஆனால் அதற்கான வழிமுறைகளை நாமே செய்ய வேண்டும். போதும்மான வழிமுறைகள் இல்லாமல் எம்மால் அந்த இலக்கை அடைய முடியாது என்று அன்று அமரர் வீரசிங்கம் பாராளுமன்றத்தில் கூறியவை இன்று நடைமுறையில் பல்கலைக் கழகங்களில் தாய்மொழி மூலமான கல்வி போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்

கூட்டுறவுத் துறையில் அமரர் வீரசிங்கம் சாதித்த சாதனைகள் பலவாகும். கூட்டுறவு பாலத்தால்வடக்கு- கிழக்கை மட்டுமல்லாமல் -தென்னிலங்கையும் ஒன்றாகஇணைத்து வெற்றி கண்டவர் அமரர் வீரசிங்கம்.

பொருளாதார வளத்தில் நலிந்த ஏழைமக்களின் வாழ்வில்ஒளிபெறச் செய்வதற்குருவான கூட்டுறவை, கூட்டுறவுக்கொள்கைவழிநின்றுதனது ஆளுமையினாலும் சிறந்த தலைமைத்துவத்தினாலும் கூட்டுறவு இயக்கத்தை வடபகுதியில் புனிதமான ஓர் இயக்கமாகக் கட்டிவளர்த்தார்.

இன்று கூட்டுறவுத் துறையில்தம்மைத்தாமேஈடுபடுத்தி கூட்டுறவுத் தலைமைத்துவத்தை அலங்கரிக்கும்''நவீன கூட்டுறவாளர்களின்'' கூட்டுறவுச் செயற்பாடுகளுக்கு எதிர்மறையானவராக அன்று விளங்கினார்.

கூட்டுறவாளர்களுக்கென கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வைசெய்வதற்கென வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையை உருவாக்கி அச் சபையின் தலைவராக இறக்கும் வரை இருபத்திஆறு வருடங்கள் கூட்டுறவாளர்களினால் ஒருமனதாகத்தெரிவு செய்யப்பட்டு வந்தார். கூட்டுறவுப் பிரசாரத்துக்கும், கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தையும், உணர்ந்து கூட்டுறவுக் கல்லூரி நிறுவிஅதன் மூலமும் கூட்டுறவு கல்வி விரிவாக்கத்துக்கென''ஐக்கிய தீபம்''சஞ்சிகையை தமிழிலும் ''கோப்பிறேற்ரர்'' என்னும் சஞ்சிகையை ஆங்கிலத்திலும்வெளியிட்டுவைத்தார். இதன் மூலம் கூட்டுறவு பற்றிய விளக்கத்தைப் பாமர மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல முடிந்தது.

கூட்டுறவினுள் பிரவேசித்த அமரர் வீரசிங்கம் தனக்கென ஓர் சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

புனிதமான கூட்டுறவுத் துறைக்கு மேலும் மெருகூட்டும் வகையில் அவரது ஒவ்வொரு செயற்பாடும் அமைந்திருந்தது. இன்று கூட்டுறவில் விரும்பத்தகாத போட்டிகள், பொறாமைகள், கழுத்தறுப்புக்கள், அன்றைய கூட்டுறவில் காணப்படவில்லை.

இன்றைய கூட்டுறவைப் பொறுத்தவரையில் அதன் தலைமைத்துவத்தில் உள்ளோர் தமது சுய ஆளுமையை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய்இருக்கிறார்களேஒழிய ஏழை மக்களின் வாழ்க்கைந் தரத்தை உயர்த்தவோ அல்லது அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவோராகத் தெரியவில்லை.

''ஒருவர் பலருக்காகவும்; பலர்ஒருவருக்காகவும்''என்ற நிலை மாறி ''தங்களுக்குத் தாங்களே''என்ற முறையில் செயற்பட்டு வருவதனால்கூட்டுறவியக்கத்தின் செயற்பாட்டில் உள்ளநிறுவனங்கள் திசை மாறி முதலாளித்துவத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் திணறுவதைக் காணமுடிகிறது

அமரர்வீரசிங்கம் காலத்தில் தனித்துவமாகத் தனித்தன்மையைப் பேணிவந்த கூட்டுறவு நிறுவனங்கள் இன்று தனித்தன்மையைஇழந்துயார் யாரிடமோ தம்மை அடகு வைத்து ''தாம் தான் கூட்டுறவாளர்'' என்ற இறுமாப்புடன் பவனி வருகிறார்கள். இவர்களிற்கு எதிர்மாறாகக் கூட்டுறவு வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் தான் அமரர் வீரசிங்கம்

அமரர் வீரசிங்கத்துக்கு ஆண்டு தோறும் விழா எடுப்பதிலும் பார்க்க அவர் வழி நின்று புனிதமான கூட்டுறவு இயக்கத்திற்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் களங்கம் கற்பிக்காது கூட்டுறவில் பணிபுரியும் பணியாட்களின் அப்பழுக்கற்ற சேவைக்குமதிப்புக் கொடுத்து அவர்களுக்குரிய ஊதியங்களை குறைவின்றி முறையாக வழங்குவதற்கு ஆவன செய்தலே இன்றைய தேவையாகும்.

அமரர் வீரசிங்கத்தின் நாமத்தை முன்வைத்து கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாகக் காட்சி தரும் நான்குமாடிக்கட்டிடத்திற்கு முன்பாக அவருக்கு சிலை வடித்து நினைவுகூரக் கூட்டுறவாளர்கள் முன் வர வேண்டும்.

> அமரர் வீரசிங்கத்தின் 36-வது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது,
>
> (ஆ–ர்)

# பண்பற்ற செயலில் பாது. ஊழியர் பொது மக்கள் மத்தியில் விசனம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் பண்பற்ற முறையில் நடந்து கொள்வது குறித்து பொதுமக்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

நோயாளரைப் பார்வையிடும் நேரம் பிந்தி வரும் போது மக்களை உள்ளே செல்ல அனுமதி வழங்காததுடன், இவ்வாறானவர்களிடத்து வசைமாரி பொழிவதிலும் பாதுகாப்பு ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக வழியில் சுணக்கம் ஏற்படுவது குறித்தும், நோயாளர்களுக்கு ஏற்ற உணவுகள்உடன்வழங்கவேண்டிய அவசியம் குறித்து விளக்கி, உட்செல்ல அனுமதி கேட்டாலும் இந்த இரும்பு மனம் படைத்தவர்கள இளகுவதில்லை என பாதிக்கப்படுவோர் புகார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவர்கள் தம் நண்பர்கள், உற்றார், உறவினர் விடயத்தில் தமது பொறுப்பான பாதுகாப்பு கடமையின் சட்டதிட்டங்களில் நெகிழ்ச்சித்தன்மையை கடைப்பிடித்து வருவதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதேசமயம், சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் இறுக்கமான கட்டுப்பாடுகள் பேணப்படவேண்டியது அவசியமாயினும், அதனை பக்கச்சார்பற்றதாயும், மக்கள் மனம் கோணாதவகையிலும்செயற்படுத்துவதில் தான், பணியின் வெற்றி தங்கியுள்ளதென விடயமறிந்த பலரும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். (உ–59)

## மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் கல்வி கற்று, இடப்பெயர்வு காரணமாக வேறு பாடசாலைகளில்கல்வி கற்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகளைநாளைபுதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மருதனார் மடம் கல்வி அலுவலகத்திலும் வைத்து வழங்கப்படவிருப்பதாக அதிபர் கே. எம். சாம்பசிவம்அறிவித்துள்ளார். அத்துடன்,

மேற்படி பாடசாலையில் கல்வி கற்று, தற்போது பல்வேறு பாடசாலைகளிலும் கற்று வருகின்ற தரம்9 மாணவர்களை, பாடசாலைமட்டக் கணிப்பீட்டுப் புள்ளிகளை வரும் வியாழக்கிழமைக்கு முன்பாக மருதனார்மடம் கல்வி வலயத்தில் ஒப்படைக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்/ வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் ஐயாத்துரை துரைராஜா அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் ந. சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை உள்ளிட்ட பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

பாடசாலையின் பழைய மாணவர்சங்க செயலாளர் வி. தயாபரன் நன்றியுரை வழங்கினார். (உ)

## கிளைகள் திறப்பு

(கல்வயல்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் இடம்பெயர்ந்த சங்கப் பாவனையாளர் நலன் கருதி புதிதாக இருகிளை நிலையங்களைத் திறந்துள்ளது.

மந்திகைச் சந்தி, கொக்வில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலடி ஆகிய இடங்களில் அவ் இரண்டு கிளைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இடங்களில் அமைந்துள்ள கிளைகள் மூலம் மக்களுக்கான நிவாரண விநியோகம் இலகுவாக்கப்பட்டுள்ளது. (ச-111)

## வீதி திருத்தம்

(கல்வயல்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலை வீதி திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தால் செப்பனிடப்பட்டு போக்குவரத்துக்குச் சௌகரியமான வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-111)

# கிழக்கு பல்கலைக்கழக 7 வது பட்டமளிப்பு விழா மூவருக்கு கலாநிதிப்பட்டம்

(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஏழாவது பட்டமளிப்பு விழாவின் போது தமிழறிஞர்கள் மூவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம்வழங்கபல்கலைக் கழக மூதவை தீர்மானித்துள்ளது.

தற்போது கனடாவில் தமிழ்ப்பணி புரிந்து வரும் தமிழறிஞர் கே. டி செல்வராஜா கோபாலுக்கு 'இலக்கிய கலாநிதிப் பட்டமும், பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ரீ. யோகரத்தினத்திற்கு 'கௌரவ கலாநிதிப்பட்டமும், கிழக்குப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் அமரருமானபேராசிரியர் எஸ் சந்தானத்திற்கு தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப் பட்டமும் வழங்கப்படவுள்ளன.

எதிர் வரும் 20 ஆம் திகதி பல்கலைக்கழக வந்தாறுமூலைப் பிரதான மண்டபத்தில்உபவேந்தர் எம்.எஸ் மூக்கையா தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவில் சகலபீடங்களையும் சேர்ந்த 327 பட்டதாரிகள் சான்றிதழ்பெறுகிறார்கள். (ச-108)

# டேபா திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மட்டு. அரச அதிபர் தயக்கம்

[ஏறாவூர்]

''மட்டக்களப்பு மாவட்டத்தில் நோர்வே அரசு நிதியுதவியுடன் அடுத்த ஆண்டில் செயற்படுத்தப்படவுள்ள (DERBA) திட்டத்திற்கான நடவடிக்கை அறிக்கை மக்களது தேவைகளை இனங்கண்டு தயாரிக்கப்படாத வரை அத்திட்டத்தினை அமுல்படுத்தப் போவதில்லை'' என மாவட்ட அரசாங்க அதிபர் இ. மௌனகுருசாமி தெரிவித்துள்ளார்.

'டேபா' திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென ஏழு கோடி ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்டங்களை மாகாண சபை அதிகாரிகளே தயாரிக்கின்றனர். இதன் போது மக்களது அடிப்படை நலன்கள் கருத்திற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை

கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல முஸ்லிம், தமிழ்க்கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட சிலரதுநலனை மாத்திரம் கருத்திற்கொண்டு 'டேபா' திட்டம் நடைமுறைப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-108)

## தட்டுப்பாடு

யாழ்ப்பாணப் பகுதி கடைகளில் துவரம் பருப்புக்கு தொடர்ச்சியாக தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூபா 80 இலிருந்து ரூ 100 வரைவிற்பனை செய்யப்படுகிறது. (ச-111)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## விவசாயம் பகுதி - 1

நேரம் : 1 மணி

தொகுப்பு: இ. சிவானந்தமூர்த்தி

(பலாலி ஆசிரிய கலாசாலை)

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

21) வயலில் வளரும் களைகளிடையே மிகவும் எளிதாகக் கட்டுப்படுத்த முடியாத களை.
1) சீதேவியாக் செங்கழுநீர் 2) பூம்புல் 3) கோரை 4) நாயுருவி

22) பின்வருவனவற்றில் நெல்வயலில் நன்மை தரும் பூச்சி அல்லாதது.
1) லேடிபேர்ட் வண்டு [ஆமை வண்டு] 2) சிவப்புக்கடிவண்டு
3) நெல் மூட்டுப்பூச்சி 4) ஓநாய்ச்சிலந்தி

23) நுண்ணங்கிகளின் துணையுடன் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்.
1) விசிறி உலர்த்தப்பட்ட பால்மா 2) ஜோக்கட்
3) மாஜரீன் 4) கட்டிப்பால்

24) 'அசொலா' என்பது.
1) நெல்வயல்களில் நைதரசன் நிலைநாட்ட இடப்படும் பன்னத்தாவரமாகும்
2) அவரையினங்களில் நோய் ஏற்படுத்தும் ஓர் நுண்ணங்கியாகும்
3) மனித உணவுப் பயிராகும் 4) அழகுத் தாவரமாகும்

25) புரதச்சத்தின் உபயோகம் பின்வருவனவற்றில் எது.
1) உடலிற்கு வேண்டிய வெப்பத்தைப் பாதுகாத்தல்
2) எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவுதல்
3) உயிர்ச்சத்துக்களை உடலுக்கு அளித்தல்
4) பழுதடைந்த உடற்கலங்களைப் புத்துயிர்ப்பளித்தல்

26) குளத்தில் உள்ள நீர் வற்றும்போது குளம் பொருக்கு வெடித்துக் காணப்படுகிறது இதற்கு காரணம்.
1) மண்ணில் உள்ளவளி வெளியேற்றப்பட்டு மண் சுருங்குவதினால்
2) நீர்வற்றும்போது களித்துணிக்கைகள் சுருங்குவதினால்
3) மண்ணிலுள்ள மணல் வெப்பமடைவதினால்
4) மண்ணிலுள்ள மடகு விரிவடைவதினால்

27) ஒட்டுமுறை மூலம் உருவாக்கப்பட்ட தாவரம் ஒன்றில் அநேகமாக:
1) ஒட்டுக்கிளையின் குணாதிசயங்கள் காணப்படும்
2) ஒட்டுக்கிளையின் குணாதிசயங்கள் காணப்படமாட்டாது
3) ஒட்டுக் கட்டையின் குணாதிசயம் காணப்படும்
4) ஒட்டுக்கட்டையினதும், ஒட்டுக்கிளையினதும் குணாதிசயங்கள் கலந்து காணப் படும்

28) இருவித்திலைத் தாவரங்களின் விதைகள் மிக ஆழமாக நடப்படுதல் தவிர்க்கப்பட வேண்டிய ஓர் கருமமாகும். இதற்குரிய பிரதான காரணம்.
1) இருவித்திலை விதைகளில் சேமிக்கப்பட்டுள்ள உணவு குறைவாக இருத்தல்
2) இருவித்திலை விதைகள் பொதுவாக தரைமேல் முளைத்தலைக் காட்டுவதினால்
3) விதைகளின் இருவித்திலைகளும் பச்சை நிறமாக மாறவேண்டியுள்ளதால்
4) தரைமேற்பரப்பில் போதியளவு காற்றோட்டம் காணப்படுவதினால்

29) ஒட்டுக்கட்டைக்காக புளிமா, தும்புமா விதைகளே தேடி நடவேண்டியுள்ளமைக்கான பிரதான காரணம்.
1) இவை ஏராளமாகக் கிடைக்கக் கூடியனவாக இருத்தல்
2) இவற்றில் கூடியளவு உணவு சேமிக்கப்பட்டிருத்தல்
3) இவை ஆழமான வேர்த்தொகுதியைக் கொண்டனவாக அமைதல்
4) இவை முளைதிறன் அதிகம் உண்டென்பதனால்

30) ஒரு போகத்தின் போதான சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற பயிர்க்கூட்டம்.
1) நிலக்கடலை, வெண்டி, உருளைக்கிழங்கு, தக்காளி
2) பயறு, மிளகாய், குரக்கன், பீற்றூட்
3) மரவள்ளி, பாகல். புடோல், கத்தரி
4) வெங்காயம், மிளகாய், புகையிலை, இஞ்சி

31) கோழி வளர்ப்பில் குஞ்சுகளிற்கு முதற் 10 நாட்களிற்குப் பாதுகாப்பு வளையம் இடபபட்டு ஒளிவளங்கப்படுகிறது இதற்கு காரணம்.
1) கோழிக் குஞ்சுகளிற்கு பார்வையைத் தெளிவாக்க
2) உணவு உண்ணலை அதிசரிக்க
3) குஞ்சுகளிற்கு தேவையான வெப்பத்தை வழங்க
4) பாதுகாப்பிற்கு

32) ஒரு பண்ணையொன்றில் 10 நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் உணவு உண்ணாது கும்பலாகக் காணப்பட்டதுடன் வெள்ளைக்களிச்சலும் காணப்பட்டது, மேலும் அதிக இறப்பும் ஏற்பட்டது ஆயின் அந்நோய்.
1) புல்லோரம் 2) கோழி அம்மை 3) கொக்சிடியோசில் 4) மரெக்ஸ்

33) உலர்வலயத்திற்கு ஏற்ற ஐரோப்பியக் கலப்பினம் எது.
1) ஜேர்சி 2) பிறிசியன் 3) அசயர் 4) சோட்கோண்

34) யூரியாவில் பரிகரித்த வைக்கோலை மாடுகளிற்கு உணவாக அளிக்கப்படுகிறது. இவ்வாறு வைக்கோல் யூரியாவில் பரிகரிப்பதற்கு காரணம்.
1) வைக்கோலை நெடுங்காலம் சேமித்துவைக்க முடியும்
2) வைக்கோலின் சுவை அதிகரிக்கும்
3) வைக்கோலின் போசனைப் பெறுமானம் அதிகரிக்கும்
4) வைக்கோலிற்கு நுண்ணங்கிகளினால் ஏற்படும் சேதம் குறைக்கப்படும்

35) இறைச்சிக் கோழிகளிற்கான ஆரம்ப உணவில் பண்படுத்தப்படாத புரத அளவு (%ல்)
1) 15%-17% 2) 22%-24% 3) 30%-32% 4) 10%-15%

36) விவசாயி ஒருவன் தனது பண்ணையிலுள்ள மாட்டில் பால்கறக்கும்போது அதன் மூலைக்காம்பு வீங்கியிருந்ததையும், முலைக்காம்பைத் தொடும்போது மாடு வேதனை அடைவதையும் அவதானித்தான். அத்துடன் கறந்த பாலிலும் கட்டிகள் இருப்பதையும் கண்டான் ஆயின் இந்நிலைக்கு காரணம்.
1) மாடு பாற்காய்ச்சலிற்குட்பட்டுள்ளது
2) மாடு மடியழற்சி நோய்க்குட்பட்டுள்ளது
3) கோமாரி நோய் பரவியுள்ளது 4) மாடு நஞ்சுணவு உண்டுள்ளது

37) பின்வரும் கனியுப்புக் குறைபாடுகளில் எது இளம் பன்றிகளை அதிகம் தாக்கும்.
1) இரும்பு 2) மக்னீசியம் 3) பொஸ்பரஸ் 4) பொட்டாசியம்

38) கன்றுகளில் அதிகமாக குளிர்காலத்தில் ஏற்படும் நோய்.
1) கோமாகி 2) குளிர்சுரம் (நியூமோனியா)
3) புருசல்லோசிஸ் 4) உண்ணிக்காய்ச்சல்

39) 'அசண்டோல்' என்பது.
1) புற ஒட்டுண்ணிக்கான மருந்து வகை
2) அக ஒட்டுண்ணிக்கான மருந்து வகை
3) விலங்கின் புண்களிற்கு இடப்படும் மருந்துவகை
4) கனியுப்புக் கலவையாகும்

40) பண்ணை உற்பத்திப் பொருட்களின் விலைத்தளம்பல் காரணமாக விவசாயிகளிற்கு நட்டம் ஏற்படுவதைத்தவிர்ப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையனது:
1) விலை உயர்வான பயிர்களை மட்டும் செய்கைபண்ணல்
2) அரச உத்தரவாத விலைத்திட்டத்தை ஏற்படுத்தல்
3) காலதாமதமான பயிர்ச்செய்கையில் ஈடுபடல்
4) ஒவ்வொரு போகத்திலும் ஒரே பயிரைமட்டும் பயிரிடல்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 168871 பி | 161146 ஏ |
| 144454 ஏ | 152651 ஏ |
| 152945 ஏ | 152945 பி |
| 152945 சி | 152945 டி |
| 161375 ஏ | 161375 பி |
| 163422 ஏ | 163422 பி |
| 163543 ஏ | 163595 ஏ |
| 163595 பி | 163595 சி |
| 163595 டி | 163595 ஈ |
| 165964 ஏ | 165964 பி |
| 165977 ஏ | 165977 பி |
| 166012 ஏ | 166012 பி |
| 166081 ஏ | 166202 ஏ |
| 166202 பி | 166374 ஏ |
| 168454 பி | 168474 ஏ |
| 168474 பி | 168474 சி |
| 168474 டி | 168574 ஏ |
| 168574 பி | 168584 ஏ |
| 168584 பி | 168601 ஏ |
| 168601 பி | 168601 சி |
| 168601 டி | 168624 ஏ |
| 168661 ஏ | 168661 பி |
| 168661 சி | 168661 டி |
| 168677 ஏ | 168677 பி |
| 168677 சி | 168678 ஏ |
| 168678 பி | 168681 ஏ |
| 178681 பி | 168681 சி |
| 168681 டி | 168681 ஈ |
| 168682 ஏ | 168682 பி |
| 168587 ஏ | 168688 ஏ |
| 168699 ஏ | 168726 ஏ |
| 168726 பி | 168726 சி |
| 169726 டி | 168726 ஈ |
| 168747 ஏ | 168751 ஏ |
| 168751 சி | 168788 ஏ |
| 168790 ஏ | 168790 பி |
| 168790 சி | 168799 ஏ |
| 168799 பி | 168804 ஏ |
| 168804 பி | 168823 ஏ |
| 168823 பி | 168823 சி |
| 168826 ஏ | 168826 பி |
| 168826 சி | 168826 டி |
| 168826 ஈ | 168839 ஏ |
| 168849 ஏ | 168849 பி |
| 168849 சி | 168849 டி |
| 168849 ஈ | 168860 ஏ |
| 168871 ஏ | 168871 சி |
| 168871 டி | 168872 ஏ |
| 168872 பி | 168873 ஏ |
| 168873 பி | 168873 சி |
| 168875 பி | 168880 ஏ |
| 168881 ஏ | 168881 பி |
| 168911 ஏ | 168915 ஏ |
| 168915 பி | 168915 சி |
| 168915 டி | 168925 ஏ |
| 168925 பி | 171649 ஏ |
| 171649 பி | 171649 சி |
| 171649 டி | 171662 ஏ |
| 17 662 பி | 171662 சி |
| 171688 ஏ | 171688 பி |
| 171688 சி | |
| 171691 ஏ | 17 691 பி |
| 171696 ஏ | 171742 ஏ |
| 171742 பி | 171748 ஏ |
| 171757 ஏ | 171757 பி |
| 171757 சி | 171757 டி |
| 171788 ஏ | 171788 பி |
| 171796 ஏ | 171798 ஏ |
| 171805 ஏ | 171805 பி |
| 171805 சி | 171805 டி |
| 171810 ஏ | 171814 ஏ |
| 171814 பி | 171814 சி |
| 171822 ஏ | 171839 ஏ |
| 171840 ஏ | 171848 ஏ |
| 171851 ஏ | 171853 ஏ |
| 171855 ஏ | 171865 ஏ |
| 171865 பி | 171876 ஏ |
| 171876 பி | 171885 ஏ |
| 171901 ஏ | 171901 பி |
| 171902 ஏ | 171911 ஏ |
| 171911 பி | 171911 சி |
| 171919 ஏ | 171919 பி |
| 171919 சி | 171937 ஏ |
| 171949 ஏ | 171952 ஏ |
| 171956 ஏ | 171972 ஏ |
| 171972 பி | 171972 சி |
| 171992 ஏ | 171994 ஏ |
| 172994 பி | 171994 சி |
| 172011 ஏ | 172011 பி |
| 172011 சி | 172011 டி |
| 172019 ஏ | 172019 பி |
| 172034 ஏ | 172039 ஏ |
| 172060 ஏ | 172060 பி |
| 172077 ஏ | 172077 பி |
| 172090 ஏ | 172090 பி |
| 172101 ஏ | 172121 ஏ |
| 172121 பி | 172121 சி |
| 172125 ஏ | 173170 ஏ |
| 173427 ஏ | 173427 பி |
| 173439 ஏ | 173440 ஏ |
| 173440 பி | 173440 சி |
| 173440 டி | 173440 ஈ |
| 173440 எவ் | 173450 ஏ |
| 173458 ஏ | 173469 ஏ |
| 173469 பி | 173469 சி |
| 173469 டி | 173469 ஈ |
| 173472 ஏ | 163496 ஏ |
| 173496 பி | 173496 சி |
| 173831 ஏ | 173831 பி |
| 173843 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 168695 ஏ | 168842 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 142724 ஏ | 142724 பி |
| 142724 சி | 142724 டி |
| 142724 ஈ | 142724 எவ் |
| 161015 ஏ | 161029 ஏ |
| 161029 பி | 161029 சி |
| 161029 டி | 161029 ஈ |
| 161029 எவ் | 161029 ஜி |
| 161146 ஏ | 263158 ஏ |
| 163348 ஏ | 163348 பி |
| 163348 சி | 163348 டி |
| 192348 ஈ | 163348 எவ் |
| 163348 ஜி | 173377 ஏ |
| 195993 ஏ | 166077 ஏ |
| 166077 பி | 166175 ஏ |
| 166175 பி | 166220 ஏ |
| 166220 பி | 166220 சி |
| 166220 டி | 166223 ஏ |
| 166223 பி | 166223 சி |
| 166276 ஏ | 166276 பி |
| 166276 சி | 166370 ஏ |
| 166370 பி | 166370 சி |
| 166714 ஏ | 168466 ஏ |
| 168490 ஏ | 168627 ஏ |
| 168627 பி | 168627 சி |
| 168627 டி | 168627 ஈ |
| 168663 ஏ | 168664 ஏ |
| 168664 பி | 168664 சி |
| 168664 டி | 168669 ஏ |
| 168723 ஏ | 168723 பி |
| 168887 ஏ | 168865 ஏ |
| 168886 ஏ | 168898 ஏ |
| 168898 பி | 168898 சி |
| 168904 ஏ | 168904 பி |
| 168904 சி | 168904 டி |
| 168910 ஏ | 168910 பி |
| 178910 சி | 168910 டி |
| 168924 ஏ | 168924 பி |
| 168936 ஏ | 171692 ஏ |
| 171720 ஏ | 171730 பி |
| 171720 சி | 171730 டி |
| 171720 ஈ | 171720 எவ் |
| 171720 ஜி | 171721 ஏ |
| 171721 பி | |
| 171721 சி | 171721 டி |
| 171721 ஈ | 171738 ஏ |
| 172738 பி | 171738 சி |
| 171751 ஏ | 171751 பி |
| 171777 ஏ | 171799 ஏ |
| 171799 பி | 171799 சி |
| 171799 டி | 171801 ஏ |
| 171804 ஏ | 171807 ஏ |
| 171807 பி | 171807 சி |
| 171807 டி | 171813 ஏ |
| 171813 பி | 171813 சி |
| 171832 ஏ | 171832 பி |
| 171860 ஏ | 171861 ஏ |
| 171866 ஏ | 171895 ஏ |
| 171895 பி | 171910 ஏ |
| 171910 பி | 171910 சி |
| 171910 டி | 171916 ஏ |
| 171923 ஏ | 171930 ஏ |
| 171930 பி | 171946 ஏ |
| 171991 ஏ | 172016 ஏ |
| 172079 ஏ | 172079 பி |
| 172079 சி | 172089 ஏ |
| 172109 ஏ | 172109 பி |
| 172113 ஏ | 172113 பி |
| 172128 ஏ | 172128 பி |
| 173438 ஏ | 173438 பி |
| 173438 சி | 173441 ஏ |
| 173443 ஏ | 173444 ஏ |
| 173444 பி | 173444 சி |
| 173451 ஏ | 173451 பி |
| 173457 ஏ | 173465 ஏ |
| 173476 ஏ | 173476 பி |
| 173476 சி | 173476 டி |
| 173486 ஏ | 173817 ஏ |

# கரவெட்டியில் வைத்திய நிலையம்

(துன்னாலை)

பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம் கரவெட்டி தெற்கு, மேற்குப் பிரதேச சபைக்கு அருகாமையில் இயங்குகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதல் இவ்விடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச - 41)

...நூலகம் யாழ்ப்பாணம்


## இன்று ஒரு தகவல்

# பணிவிற்கு தலைசாய்த்த அறிஞர் பெருந்தகை

ஒரு வழிப்போக்கன் ஒரு உள்ளூர் வாசியைப் பார்த்து 'பண்டித வித்தியா பூஷணர் வீடு எங்கேஇருக்கிறது' என்று கேட்டான்.

உள்ளூர் வாசி:'யார்அவர், எனக்கு அவரைத் தெரியாதே! அவர் வீடும் எனக்குத் தெரியாது' என்றான்.

வழிப்போக்கன்: 'அவர் நூலறிவு மிக்கவர், அவரை இந்த நாட்டிலுள்ள அனைவரும் அறிவர்' என்றான்.

இதன் நடுவே பண்டித வித்யாபூஷணரே அங்குவந்து விட்டார். இவ்விருவரின்உரையாடலைக் கேட்டபடியே நின்றார். அவர்வழிப் போக்கன்: 'சரி ஐயா! பண்டித வித்தியா பூஷணரின் வீடு தெரியா விட்டால், ராம்சேவக்கின் வீடாவது தெரியுமா?' என்றான். உள்ளூர் வாசி: 'ராம்சேவக்கின் வீடு யாருக்குத்தான் தெரியாது? அவர் கடவுள் படைத்த நல்ல மனிதர். யாராக இருந்தாலும் ஓடோடி வந்து உதவிகள் செய்வார் சாதி, மதம்,இன வேறுபாடு காணாமல் எளியவருக்கு உதவி புரிவார்' அது சரி உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும்? முதலில் பண்டிதர் என்றீர்கள் பிறகு ராம்சேவக் என்கிறீர்கள்?' என்றான்.

வழிப்போக்கன்:'எனக்குராம் சேவக்கைத்தான் சந்திக்க வேண்டும்.' அவர் என்னிடம் நேற்று'எங்கள் வீட்டுக்கு வழி தெரியாவிட்டால் பண்டித வித்தியாபூஷணர் வீடு எது என்று கேட்டு வழி தெரிந்து வாருங்கள். பண்டிதர் வீட்டுக்கு அடுத்தவீடுதான் என் வீடு' என்று கூறினார் என்றான்.

பண்டித வித்யா பூஷணர் ராம் சேவக்கின் பணிவினை அறிந்து தலை குனிந்து நின்றார்.

நன்றி

**விவேகவாணி**

# கொழும்பில் தேடுதல் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித் தெரு ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்திய பொலிஸார் வடக்கு, கிழக்கு மற்றும்மலையகத்தைச் சேர்ந்த 20 தமிழ் இளைஞர்களை கைது செய்தனர்.

இவர்களில் 12 பேரை விடுவித்துள்ளதாகவும் 8 பேரை மேல்விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளதாகவும். தெரிவிக்கப்படுகிறது. (வி)

# அதிபர் ஆசிரியருக்கான தேர்தல் கொடுப்பனவு

(துன்னாலை)

தென்மராட்சி வலயக்கல்வி திணைக்களத்துக் குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான தேர்தல் கடமையில் ஈடுபட்டமைக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

தென்மராட்சி வலயக்கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு8-ம்திகதியும்இவ்எல்லை ...ட்பட்ட பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்களுக்கு 9-ம் திகதியும் காலை9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை இடம் பெறும் என தென்மராட்சி வலயக்கல்வித் திணைக்களப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

மேற்படி வலய பணிமனை தற்போது செயற்படும் இடத்தில் இக் கொடுப்பனவு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-41)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் பயமுறுத்தப்பட்டார்

(கொழும்பு)

பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அனுரத்த ரத்வத்த பதவி ஏற்றதையடுத்து அமைச்சரினால் கண்டி பொலிஸ்மா அதிபர் சிறிசேனஹேரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுருத்தவின் மகன் றோகான் ரத்வத்த தலைமையிலான குழுவினர் கடந்த தேர்தலின் போது பிரதிப்பொலிஸ்மாஅதிபருக்கு பயமுறுத்தல் விடுத்திருந்தனர். இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட றோகான் ரத்வத்த மீது நேரடியாக குற்றச்சாட்டு இல்லாத காரணத்தினால் அவர் பிணையில்விடுவிக்கப்பட்டார்

இச் சம்பவத்தின் பின்னணியாகவே பிரதிப் பொலிஸ் அதிபருக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

# மனமுடைந்த சிப்பாய் மரணத்தை தழுவினார்

(கொழும்பு)

நோயுற்ற மனைவியை அருகில் இருந்து கவனிக்க முடியாத படைவீரர், மனமுடைந்த நிலையில் மரணத்தை தழுவிக் கொண்டார்.

குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரியஜானவெவ என்ற இடத்தில் இடம்பெற்ற இச் சம்பவம்பற்றி அறிய முடிவதாவது,

வவுனியா இராணுவ முகாமில் கடமையாற்றும் நிமல சிறி சுதசிங்க (வயது 30) என்ற படை வீரர் விடுமுறையில் வீட்டில் தங்கி நின்ற வேளை, சுகவீனம் ஏற்பட்டது.

விடுமுறைக்காலம் முடிவடைந்த நிலையில் மனைவியை விட்டுப்பிரிய மனமின்றி அலரி விதையை உட்கொண்டு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

சுகாதாரப் பிரிவு
## விளக்கம்

(அச்சுவேலி)

மழை காலத்தில் நுளம்பினால் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் அவற்றை தடுப்பது குறித்த விளக்கங்களை சுகாதாரப் பிரிவினர் மக்களிடையே அளித்து வருகின்றனர். (உ-14)

## கட்டடம் திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

இருபத்து மூன்று இலட்சம் ரூபா செலவில் ஸ்தாபிக்கப் பட்டுள்ள காத்தான்குடி முதியோர் இல்லத்துக்கான நிரந்தரக் கட்டடம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவரும்முன்னாள் பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவினால் அண்மையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் பட்டது. (க)

## முத்தமிழ் விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழாவும் கலைமலர் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் மன்றத் தலைவர் மு. ராஜவரோதயன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (செ-25)

## க.பொ.த சாதாரணதர மாணவர்க்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி யாழ். மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் கல்வி கற்று, தற்பொழுது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை மருதனார்மடம்வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே, பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரையும்தேசிய அட்டையாள அட்டை அல்லதுஅஞ்சல்திணைக்களஅடையாள அட்டையுடன் சமுகந்தருமாறு அதிபர் ச. ஞானலிங்கம் கேட்டுள்ளார். [உ]

## கோப்பாயில் 2 ஆயிரம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலிருந்தும்கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் யுத்த அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்தோருக்கான 2000 ரூபா கொடுப்பனவு நாளை புதன் கிழமை காலை 9.00 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் இடம் பெயர்ந்துஏற்கனவே கொடுப்பனவிற்கு அறிவிக்கப்பட்டு இதுவரை கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு மட்டும் இக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது பகுதி கிராமஅலுவலரிடம் தமது பெயர்கள் இருப்பதை உறுதிப்படுத்திய பின் கிராமஅலுவலரது கடிதம்மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகம் கொடுக்குமாறு மேற்படி பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# சதுரங்கச் சம்மேளன இறுதிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 2000 - 2001ஆம் ஆண்டிற்கானயாழ். மாவட்டசதுரங்க அணித் தெரிவுக்கான இறுதிப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

இப்போட்டிகளின் பிரகாரம் ஆண்கள் அணியில் கே. ஞானசீலன், வீ. உதயகுமாரன், எஸ்.வித்தியாதரன் எஸ்.சிவோதயன், கே. ஆதவன், ஜே. நிவேதன், ஏ பார்த்தீபன், ஏ.சிவரூபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் அணியில் ஜி. பாமினி, பி.நிவேதிகா, எஸ். வித்தியராணி, எஸ் கல்பனா, எஸ். நளாயினி, எஸ். ராதிகா, எஸ். சிவப்பிரியா, எஸ். காயத்திரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (உ)

## தாரகை சஞ்சிகை வெளியீடு

(கோப்பாய்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கன்னி வெளியீடான 'தாரகை' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் மேற்படிவிழாவில்தேசியகல்வியியல் கல்லூரி உபபீடாதிபதியும்'படி' பத்திரிகையின் ஆசிரியருமான பா. தனபாலன் மற்றும் கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் கே.வி. குணசேகரம், யாழ், மறை மாவட்டமறைக்கல்வி நிலைய இயக்குநர் வண. பிதா எவ். எக்ஸ். நேசராசா அடிகளார் உட்பட பலரும் கலந்து சிறப்புரையாற்ற உள்ளனர். (க-79)

## வல்லையில் வீதிக் கண்காணிப்பு

(அச்சுவேலி)

வல்லைப்பாலம் திருத்த வேலைகளுக்கு உள்ளாக்கப் பட்டு வருவதால், அப்பகுதியால் பயணம் செய்யும் வாகனங்களை விபத்தில்இருந்து தவிர்க்கும் வகையிலும், நெருக்கடிகளை நீக்கும் பொருட்டும் இராணுவ பொலிஸார் போக்குவரத்து கண்காணிப்பு மற்றும் வீதி ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-14)

## மின்சாரம் தாக்கி இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

திருமண வீட்டில் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் மின்சாரம் தாக்கியதில் தூக்கி வீசப்பட்டார்.

உரும்பிராய்பகுதியில்இடம்பெற்ற மேற்படி சம்பவத்தினால் காயமடைந்த சிவப்பிரகாசம்கிருபாகரன் (வயது25) என்ற இளைஞர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ - 2)

## ஐ. தே. கட்சியின் புதிய தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாடு நேற்றுப் பிற்பகல் கண்டி போகம்பரை மைதானத்தில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 2001ம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் தவிசாளராக கரிந்த ரத்வத்தையும், பிரதி தவிசாளராக கருஜெயசூரியாவும் பிரதிதலைவராககாமினி அத்துக்கோறளையும்பொதுச் செயலாளராக சௌரத் அத்துக் கொட்டுவவும் பொருளாளராக நிமால் வீரரட்ணவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபா பெறுமதியான தள்ளுவண்டி ஒன்றைத் திருடினார் என்ற சந்தேகத்தில் மனுவேல் அருள் என்ற நபரை இம்மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொய்யாத்தோட்டம் பகுதியில் வாடகைக்காகப் பெறப்பட்ட வண்டியை யாழ். நகரப்பகுதியில் பேரம் பேசி விற்க முற்பட்டவர் கையும் மெய்யுமாக பிடிபட்டார், இது தொடர்பான செய்தி ஏற்கனவே பத்திரிகையில் வெளியானமை தெரிந்ததே. (உ-12)

## ஆலய புனருத்தாரணம்

(மந்திகை)

கரவெட்டிப் பிரதேச ஆலயப் புனருத்தாரணப் பணிகளுக்கென 4இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக உடுப்பிட்டித் தொகுதி ஈ பி டி.பி அமைப்பாளர் வல்லிபுரம் நடராசா தெரிவித்துள்ளார்.

அல்வாய்வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயம், செட்டித்துறை சித்தி விநாயகர் ஆலயம் என்பனவே மேற்படி நிதியைப் பயன்படுத்திப் புனருத்தாரணம் செய்யப்படவுள்ள ஆலயங்களாகும். (உ-23)

## இன்று கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை நடத்தும் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 36 வது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதியில் (இரண்டாம் மாடி), காலை 10.30மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மேற்படி நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். (ச)

## தென்னம் பிள்ளை விலை வீழ்ச்சி

(கோப்பாய்)

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியிலும், சூழவுள்ள பிரதேசங்களிலும் தென்னம் பிள்ளைகள் தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளன. பதினைந்து ரூபா தொடக்கம் இருபத்தைந்து ரூபா வரையில் ஒரு தென்னம் பிள்ளை விற்பனையாகின்றது.

இதைவிட உள்ளூர்களில் சைக்கிளில் கொண்டு வருபவர்களிடம் பத்து ரூபா வீதம் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை காரணமாகவே இவ் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் கூடுதலான தென்னைகள் அழிவுற்றமையால் தென்னை செய்கையில் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். (க-79)

### இருபதினாயிரம்
# மென்பொருள் வல்லுநர்களை வரவழைக்க
# ஜேர்மன் அரசு பெரு முயற்சி
## 'பச்சைக் கார்ட்' முறையும் அமுலாகும்

[பேர்லின்]
தகவல் தொடர்புத்துறையில் தட்டுப்பாட்டை நீக்க ஜேர்மனி வெளிநாட்டு வல்லுநர்களை அழைக்கின்றது.
ஐரோப்பிய நாடுகளை தவிர மற்றைய நாடுகளிலிருந்து மென்பொருள் வல்லுநர்கள் இருபதினாயிரம் பேரை ஏற்கனவே அழைத்திருந்தமையும் அதில் பெருமளவானவர்கள் இந்தியர்களாக இருந்ததும்,
இப்பொழுது ஐயாயிரம் மென்பொருள்துறையினரை பச்சைக் காட் கொடுத்து தனது நாட்டில் வேலைக்கு ஜேர்மனி அழைத்திருக்கிறது பச்சை காட் முறை என்பது வேலையுடன் வீடும் ஐந்து வருடத்துக்கு கொடுத்து உதவுவது என்பதாகும்.
ஜேர்மனியில் மென்பொருள் துறையாளர்கள் கூடுதலாகத் தேவைப்படுவதால் மேலும் பல ஆயிரம் பேருக்கு குறிப்பாக மென்பொருளாளருக்கு வாய்ப்புக் கிடைக்க இருக்கின்றன.
[து]

## உறவில் விரிசல்

(டாக்கா)
பங்களாதேஷிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டதையடுத்து இருநாடுகளுக்கிடையிலும் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.
பாகிஸ்தான் தூதுவர் டாக்காவில் ஆற்றிய கடந்த கால கொலைகள் பற்றிய உரையை அடுத்து டாக்கா அதிகாரிகள் எதிர்த்தெழுந்ததும் பாகிஸ்தான் இது தொடர்பாக வருத்தம் தெரிவித்த போதும் இருநாடுகளுக்கிடையேயும் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.
(து)

## அரசுடன் பேச்சு நடத்த விடுதலை ராணுவம் முனைப்பு

(மொன்டொரி)
மெக்சிக்கோவின் தேசிய விடுதலை இராணுவம் புதிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளது.
நேற்று முன் தினம் புதிய அதிபர் பதவி ஏற்று சமாதானத்தை சுட்டிக் காட்டிப் பேசியதை அடுத்தும் தேசிய விடுதலை இராணுவம் மெக்சிக்கோ அரசுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று சொல்லியிருக்கிறது.
மெக்சிக்கோவில் ஒருபகுதியைச் சேர்ந்த பத்து இலட்சம் மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் ஆரம்பிக்கப்பட்டதே தேசிய விடுதலை இராணுவம்.
இந்த விடுதலை இராணுவத்துக்கும் அரசின் இராணுவத்திற்கும் சில பகுதிகளில் போர்கள் மூண்டு வந்தன.
புதிய அரசு பதவிக்கு வந்ததையடுத்து குறிப்பிட்ட யுத்தப் பிராந்தியத்திலிருந்து அரசு இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து தேசிய விடுதலை இராணுவம் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
[து]

# வீரப்பன் தப்பி ஓடவில்லை காட்டுக்குள்ளேயே இருக்கிறான்
## அமைச்சர் மல்லிகா அர்ஜுன் தெரிவிப்பு

(புதுடில்லி)
சந்தனக்கடத்தல் வீரப்பன் இன்னும் காட்டுக்குள்ளேயே இருக்கிறானென்றும் அவன் தப்பி ஓட வில்லையென்றும் கர்நாடக உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.
உள்துறை அமைச்சரான மல்லிகா அர்ஜுன் மேலும் தெரிவிக்கையில்; உளவுத்துறையின் கூற்றுப்படி வீரப்பன் தப்பிச் செல்வதற்கு வழியில்லையென்றும், அவன் வெளிச்செல்லும் நடமாட்டத்தை காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனரென்றும் தெரிவித்தார்.
மேலும் அவர் குறிப்பிடுகையில்; எமது காவல் துறையினர் விரைவில் சந்தனக்கடத்தல் வீரப்பனை மடக்கிப் பிடிப்பார்களென்றும் தெரிவித்தார்.
(து)

## 51 வயதில் 28 பிள்ளைகள் நேபாள பெண் சாதனை

(காட் மண்டு)
நேபாளத்தை சேர்ந்த ஐம்பத்தொரு வயது குடும்ப பெண்மணி ஒருவர் இருபத்தெட்டு பிள்ளைகளைப் பெற்று மகத்தான சாதனை புரிந்த சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.
ஐம்பத்தொரு வயதான இவருக்கு பதினேழாவது வயதில் முதலாவது பிள்ளையைப் பெற்றாராம் அதனைத் தொடர்ந்து ஆண்டுக்கொரு பிள்ளை வீதம் பெற்றாராம்.
ஐம்பத்தொரு வயதுடைய இவரின் எட்டாவது குழந்தை பன்னிரண்டாவது வயதில் திருமணமானார்.
சில குழந்தைகளை வயல்களில் வேலை செய்யும்பொழுதும் காட்டில் விறகு பொறுக்கும் போதும் பெற்றதாகக் கூறுகிறார்.
பச்சிங்மாய எனப்படும் இவர் இப்பொழுது நல்ல திடகாத்திரமாக இருப்பதாக அறியப்படுகிறது.
(து)

## வலுவான தலைமைத்துவம் நோக்கி சிங்கப்பூர் வீறுநடை

(சிங்கப்பூர்)
சிங்கப்பூரில் வலுவான தலைமைத்துவ அமைப்பு வேண்டுமென்று மக்கள் செயல் கட்சிகேட்டுக் கொண்டுள்ளது.
கட்சி பூர்வாங்க அமைப்புகளில் ஈடுபட்டு வருவதாகவும் நல்லதொரு தலைமைத்துவத்தை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் அடுத்த தேர்தலில் நல்லதொரு கட்டமைப்பான ஆட்சியை அமைக்க வழிகோலப் போவதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.
(து)

## உலக தரிசனம்

## இராஜினாமா

(புதுடில்லி)
இந்திய மத்திய ரயில்வே அமைச்சர் மம்தா பணார்ஜி இராஜினாமாச் செய்துள்ளார்.
பஞ்சாப்பில் நடந்த ரயில் விபத்தில் இவ்வளவு கூடுதலானோர் இருந்தாலும் இரு ரயில்கள் சேதமடைந்தாலும் தனது பதவி விலகல் கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பியுள்ளார்.
மம்தாபணார்ஜி ஏற்கனவே இருமுறை தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்த பின் வாபஸ்பெற்றமை இங்குகுறிப்பிடத்தக்கது.
(து)

## மின்வாரியம் தனியார் மயமாகாது அமைச்சர் தெரிவிப்பு

[சென்னை]
தமிழ் நாட்டு மின்சார வாரியத்தைத் தனியார் மயமாக்கும் திட்டம் இல்லையென்று அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி தெரிவித்துள்ளார்.
மின்சாரவாரிய அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி இது பற்றி மேலும் தெரிவிக்கையில் தற்போது உள்ளதுபோலவே மின் வாரியம் இயங்குமென்றும் அதனை தனியார்மயமாக்கும் எண்ணம் இல்லையென்றும் மின்சார வாரியக்காரர் செய்ய இருக்கும் வேலை நிறுத்தத்தைக் கை விடும் படியும் கேட்டுக் கொண்டார்.
[து]

## இந்தியாவின் யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு பாகிஸ்தானின் பதில்

(புதுடில்லி)
இந்தியா அறிவித்துள்ள காஷ்மீர் யுத்த நிறுத்தத்திற்கான பதிலை பாகிஸ்தான் அனுப்பியுள்ளது.
அந்த பதில்களின் நகல்கள் பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் வெளியுறவு அதிகாரி தெரிவித்தார்.
அந்த பதிலில் பாகிஸ்தான் படைகள் எல்லைக் கோட்டுப் பகுதிகளில் மிகக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமென்று தெரிவிக்கப்படுவதாகச் சொன்னார்.
இதே வேளை, இந்தக் கட்டுப்பாடுகளில் நம்பகத் தன்மைகள் காண முடியாதென்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்ணான்டஸ் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.
(து)

## உலகஅழகுராணியாக இந்தியப் பெண்

ஆசிய பசுபிக் அழகிப்பட்டத்திற்கு ஹைதராபாத்தைச் சேர்ந்த திவ்வியா மிஸ் ரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
இப்பட்டத்தைப் பெறும் இந்திய முதல் பெண் இவராவர். இது இந்தியாவிற்கு கிடைத்த பெருமையெனக் கருதப்படுகிறது.
இந்தஆண்டுஅழகிகளுக்கான மூன்று பட்டங்களைத் தட்டிக் கொண்ட நாடு இந்தியாவாகும்.
(து)

## பாகிஸ்தானில் புதிய கட்சி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் பதினெட்டு கட்சிகள் சேர்ந்த ஜனநாயக கூட்டணிக் கட்சியை உருவாக்கியுள்ளது.
முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப்பின் முஸ்லிம் லீக் மற்றும் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் மற்றும்பதினாறு சிறிய கட்சிகளும் இணைந்து பாகிஸ்தான் ஜனநாயக கூட்டணிக் கட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது.
இக்கட்சியின் தலைவராக நவஷாரா நசுருல்லா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
(து)

## வறிய நாடுகளுக்கு கடன்கள் வழங்குவதில் பிரிட்டன் பின்னடிப்பு

(லண்டன்)
உலகிலுள்ள வறுமையான நாடுகளுக்கு கடன் வசதிகளைக் குறைப்பதென்றும் அல்லது நிறுத்துவதென்றும் பிரிட்டன் தீர்மானித்துள்ளது.
நாற்பதிற்கு மேற்பட்ட வறிய நாடுகள் உலகிலுள்ளதாகவும் நிக்கராகுவா, தன்சானியா, எத்தியோப்பிய போன்ற நாடுகள் இவற்றில் அடங்குமென்றும் தான் ஏற்கனவே கொடுத்த கடன் தொகைகளைத் திருப்பிப் பெற முடியாத நிலையில் இருப்பதாகவும் அதனால் கடன் கொடுக்கும் விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கப் போவதாகவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.
(து)

## நான்கு குழந்தைகள் பலி ஜம்முவில் கோரச் சம்பவம்

(ஸ்ரீநகர்)
ஜம்மு - காஷ்மீர் உதம்பூர் மாவட்டத்தில் நான்கு குழந்தைகள் கோரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.
பம்பூர் மாவட்டத்தில் மகோர் என்ற கிராமத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் வீட்டில் இச்சம்பவம் இடம் பெற்றது.
சுமார் எட்டு மணியளவில் அந்த வீட்டிற்கு வந்த தீவிரவாதிகள் வீட்டின் மீது கைக்குண்டுகளை வீசியதைத் தொடர்ந்து வீட்டினுள் சென்று சரமாரியானதுப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.
தீவிரவாத அமைப்பினரே இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும் இச்சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பலத்த பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
பொலிஸாரின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரையில் எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை,
(கது)

# இந்திய மத்திய புலனாய்வுக் குழு இலங்கைக்கு விஜயம்
## புலி உறுப்பினரின் வாக்குமூலமும் பதிவு

இலங்கை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரை, ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில், இந்திய மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்து சென்றிருப்பதாக தெரியவந்துள்ளது.
நிக்சன் என்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரிடமே இவ்வாறு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
சி.பி.ஐ. அதிகாரிகளின் மேற்படி வாக்குமூலம் பெறும் முயற்சிக்கு இலங்கை அதிகாரிகள் முதலில் மறுப்பு தெரிவித்திருந்திருந்தனர்.
எனினும் நீதிமன்ற அனுமதியைப் பெற்று குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.
இந்திய மத்திய புலனாய்வுத்துறையின் முக்கிய அதிகாரிகள் மூவர் அடங்கிய குழு கடந்தவாரம் கொழும்பு விஜயம் மேற்கொண்டமை தெரிந்ததே.
இதேவேளை, இந்திய முக்கிய அரசியல் வாதிகளுக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் இடையேயான தொடர்புகள் குறித்தும் இவர்கள் ஆராய்ந்திருப்பதாக தெரியவந்துள்ளது.
(உ)

யாழ்ப்பாணம்

குடிப்பாரை இல்லாத ஏமார மன்னன்
கெடுப்பார் குலனுங் கொடு
- குறள்

# வலம்புரி

## பிரதமரின் ஜோக்!

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பதவியேற்றதிலிருந்து அவரினால் வெளியிடப்படும் கருத்துக்களும், உரைகளும் அவரின் கொள்கையில்லாப் போக்கையே பிரதிபலிக்கின்றது. வயதின் முதிர்வில் நிதானம், பொறுமை அற்று, மறதி அதிகரிப்பது வழமையான இயல்பு என்ற வகையில் அவற்றைப் பேசாது விட்டாலும்,

கடந்த இரு தினங்களுக்கு முன் பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாம் பிடித்துக் கொடுக்க மாட்டோம். தேவையென்றால் இந்தியா பிடித்துச் செல்லட்டும் எனக் கூறியுள்ளார்.''

ஏதோ பிரபாகரனை தம்மால் கைது செய்ய முடியும் என்றும், ஆனால் அதைக் தாம் விரும்பாத படியால் இந்தியா வந்து பிடித்துச் செல்லட்டும் என்ற பொருளிலும் பிரதமரின் உரை அமைந்துள்ளது. இது மிலேனியம் ஆண்டில் பிரதமர் கூறிய மிகப்பெரிய ஜோக்ஆகும்.

வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்தஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றி சர்வதேசமெங்கும் வெற்றி முரசு கொட்டிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ''கைது செய்தல்'' என்ற வார்த்தையை நாவில் யார் உரைக்கின்றாரோ அவருக்கு சித்தம் சுவாதீனமாக இருக்க முடியாதென்பதே உண்மை.

ஒருமுறை இந்தியஇராணுவம் இலங்கைக்குவந்து பிரபாகரனை பிடிக்க முயற்சி செய்து மூக்குடைபட்டு போனதை இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியும், பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவும் மறந்திருந்தாலும், இந்திய இராணுவம் எளிதில் மறந்திருக்க நியாயமில்லை. அதற்கு இந்திய அமைதிப் படையின் ''தளபதிகள்'' எழுதிய வரலாறுகள் சான்றாகும்.

நிலைமைகள் இவ்வாறு இருக்கும் போது நடைமுறைக்குச் சாத்தியமற்ற - நினைத்தும் பார்க்கமுடியாத பிரபாகரனின் கைது பற்றிப் பேசிக் காலத்தை வீணாக்காது ஆகக் கூடியதைப் பார்ப்பதே நாட்டிற்கு நன்மையாகும்.

# கண்ணின் ஒளியைப் பேணிப் பாதுகாக்க

# விற்றமின் 'ஏ' உள்ள உணவு அவசியம்!

டக்டர் சீ. கே. எம். சபாபதி

நம் உடலில் புலன் உறுப்புகளில் கண்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. கண்ணின் பெருமை குறித்துப் பேசும் போது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்றார். ஔவையார் 'எண்ணென்ப ஏனைஎழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்று கண்ணோடு ஒப்பிட்டு கண்ணின் பெருமையைக் கூறியுள்ளார் வள்ளுவர். கண்களில்லையெனில் வாழ்க்கையில் பெருந் துன்பங்கள் நேரிடும். இத்தகைய கண்களில் சிறியவர்கள்முதல் பெரியவர்வரை பல கோளாறுகள் தோன்றுகின்றன. குறிப்பாகப் பார்வைக் கோளாறுகளான,

★ கிட்டப்பார்வை, தூரப் பார்வை, இரட்டைப் பார்வை, ஒரு கண்ணில் பார்வை இழப்பு, கண்ணில் லென்ஸ் இல்லாமலிருத்தல், வெளிச்சத்தைப் பார்த்தால் பயம் உண்டாதல், கண்ணீர் அதிகமாக சுரத்தல், மாறுகண், விற்றமின் குறைபாட்டால் ஏற்படும் மாலைக்கண் என்னும் இரவில்கண்தெரியாமை, பகலில்கண் பார்வைமங்குதல், கண்ணில் புரை, கண்பார்வை இழத்தல் போன்ற குறைபாடுகள் கண்களில் தோன்றுகின்றன.

### கண்ணாடி அணிதல்

இத்தகைய கண்களின் குறைபாடுகளுக்காகக் கண்ணாடிகளை அணிகின்றனர். இதனால் இயற்கையான பார்வைத்திறன் மேலும் குறையுமேதவிர, கூடுவதற்கு அதிகமான வாய்ப்பு இல்லை. காரணம் நாம் செயற்கையான பார்வைத்திறன் பெறும் போது கண்கள் இயற்கையாயாகப் பார்க்க முயற்சிகள் செய்வதில்லை, ஆகவே கண்களில் எத்தகைய பார்வைக் கோளாறுகள், மற்றக்குறைபாடுகள் தோன்றினாலும் அதற்கு நாம் சில தெய்வீக மூலிகைகள், உணவுகள், சில வித எளிய கண்பயிற்சிகளைக் கைக்கொண்டால் எவ்வித பார்வைக் கோளாறுகளிலிருந்தும் கண்ணாடிகள் அணிவதிலிருந்தும் விடுபடலாம். கண்ணோய்களும் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.

மற்ற விலங்கினங்களோடு பார்க்கும்போது, நமது பார்வைத்திறன் மிகவும் குறைவாகும். பல மைல்களுக்கு மேலே பறக்கும் பருந்து கிழேயுள்ள சிறிய பொருளைக் கண்டு கவ்விச் செல்கின்றது. தண்ணீருக்குள் இருக்கும் மீன் குஞ்சுகளை, மீன்கொத்திப் பறவை கொத்திச் செல்கின்றது. மேலும் பறவைகளோ விலங்கினங்களோ பார்வைக் குறைபாடுகள் தோன்றிக் கண்ணாடிகள் அணிவதில்லை நம்முடைய தவறான உணவுப்பழக்கம், செயற்கையான வாழ்க்கை முறைகள் போதிய பயிற்சியின்மை போன்றவற்றால் கண்ணாடி அணியவேண்டிய நிலை ஏற்படுகிறது.

### பார்வை குறைவுக்கான காரணங்கள்

கண்களில் தோன்றும் முக்கியமான முறைபாடுகளுள் ஒன்று கண்ணில் புதையுண்டாவதும், கண்பார்வை இழத்தாலும் தான்கண்ணுள் புரை மற்றும் கண்பார்வை இழத்தலுக்கான காரணங்களாவன கர்ப்பிணிப்பெண்கள் கர்ப்ப காலத்தில் சரியான, திடமான உணவு உட்கொள்ளாமை, கர்ப்பகாலத்தில் ஏற்படும் அம்மைநோய், இரத்தஅழுத்தம், உடல்தூக்கம், வலிப்பு, இரத்தப் போக்கு ஏற்படுதல், கர்ப்ப காலத்தில் 'X' Ray எடுத்தல் உட்கொள்ளும் மருந்துகள் போன்றவையாகும். இவற்றால் குழந்தை பிறக்கும் போதே பார்வைக் கோளாறுகள். மற்றும் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. உணவில் விற்றமின் A பற்றாக் குறை, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் இதயக்கோளாறுகள், அடிக்கடி தலைவலி ஏற்படுதல், பால்வினை நோயான சிப்பிலிஸ் என்னும் நோய் கண்ணிற்கு இரத்தோட்டத்தைத் தரும் இரத்தக்குழாய்கள் அடைப்பு ஏற்பட்டு வெடித்து இரத்தப் போக்கு ஏற்படுதல், நீரிழிவு நோயினால் கண்ணிற்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்பட்டுக் கண்ணின் உட்பகுதி அழுகிவிடுதல், உடலில் நோய் எதிர்ப்புசக்தி குறைதல், கண்ணின் அமைப்பில் குறைபாடு இருத்தல், கண்களில் ஏற்படும் GLAU COMA எனப்படும் அழுத்தம் அதிகமாதல் போன்ற காரணங்களைத்தவிர, முதுமையாலும், சரியான விழிப்புணர்ச்சி இன்மையாலும் பார்வை இழப்பு ஏற்படுகின்றது. நெருங்கிய இரத்த உறவில் கல்யாணம் செய்து கொண்டாலும் கண்பார்வை இழக்க அதிக வாய்ப்புள்ளது.

### பார்வையைக் காத்தல்

ஓடும் வாகனங்களில் படித்தல் கூடாது. மங்களான ஒளியில் படிக்கக்கூடாது. மிகச் சிறுசிறு எழுத்துகளைப் படிக்க முயலக் கூடாது, கண்களில் எண்ணெய் விடுதல் கூடாது, மிக அதிகப் பிரகாசமான ஒளியை நேராகப் பார்ப்பதைத்தவிர்க்கவும், தொலைக்காட்சிக்கு அருகில் அமர்ந்து படம் பார்த்தலைத் தவிர்க்கவும், தேவையான பொழுது மட்டும் கண்ணாடிகளை உபயோகிக்கவும், சத்தான உணவுகளை குறிப்பாக விற்றமின் ஏ உள்ள உணவுகளான கரட், பப்பாளி, கீரை வகைகள், மாம்பழம், பால், முட்டைக்கேஸ் மற்றும் அனைத்துரகக் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உட்கொள்ளவும் சரியான கண்பயிற்சி செய்தல், மன அழுத்தத்தைக் குறைத்தல் போன்ற சிலவற்றைக் கடைப்பிடித்து முடிந்த அளவுகண்பார்வையைக் காத்துக்கொள்ளலாம்.

### தெய்வீக மூலிகைகள்

வேப்பிலை, துளசி, அறுகம் புல், தும்பைப் பூ, கரிசலாங் கண்ணி, வெந்தயம் போன்றவைகளை வெய்யிலில் காய வைத்து பொடி செய்து, பின் சமஅளவில் ஒன்றாகக் கலந்து ஒரு போத்தலில் வைத்துக் கொள்ளவும் இதிலிருந்து.ஒரு கரண்டி (மூன்று கிராம்) அளவு எடுத்து அரை டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினமும் காலை, இரவு இருவேளையும் உட்கொள்ளலாம். இப்பொடிகளை இரண்டு மாதத்திற்கொரு தடவை புதியதாகத் தயார் செய்து வைத்துக் கொண்டு 120 நாட்கள் உட்கொண்டால் பார்வைக் கோளாறுகள் நீக்கப்படுவதுடன், தடுக்கவும் உதவுகின்றது.

### உணவுகள்

பார்வைக் கோளாறுகள் உள்ளவர்கள், பப்பாளி, மாம்பழம், பேரீச்சை, கரட், முட்டைக் கோஸ், சப்போட்டா, ஆரஞ்சு, கொத்தமல்லிதழை, வெங்காயம், முருங்கைக்காய், முருங்கைக் கீரை, வெந்தயக்கீரை, அகத்திக்கீரை, அன்னாசிப்பழம், வாழைப் பழம், தேங்காய், பலாப் பழம், பேரிக்காய், கறிவேப்பிலை போன்றவைகளில் முடியுமானதைப் பச்சையாகவும், முடியாதவைகளை வேக வைத்தும், தினசரி உணவில் ஏதேனும் ஒன்றிரண்டை அதிகமாக உட்கொண்டால் நல்லது.

### கண் பயிற்சிகள்

வஜ்ஜிராசனத்தில் உட்கார்ந்து கொண்டு அல்லது சாதாரண நிலையில் நின்று கொண்டு, சுமார் இருபது முறை கண்களைமூடித்திறக்க (சிமிட்டுதல்) வேண்டும். சுத்தமான குளிர்ந்த நீரில் கண்களைக் கழுவவேண்டும். சிறு பாத்திரத்தில் சுத்தமான நீரை நிரப்பி கண்களை அதில் மூழ்கவைத்து, நீருக்குள் சில முறை கண்களைத் திறந்து மூட வேண்டும். ஒவ்வொரு கண்ணையும் அரை நிமிடம் இவ்வாறு கழுவவேண்டும். உட்கார்ந்த நிலையில் இமைகளை நன்றாக மூடிக்கொண்டு இரண்டு உள்ளங் கைகளையும் சில நிமிடங்கள் உரசவும், லேசாக வெதுவெதுப்பான சூடு உருவாகும் போது உள்ளங்கைகளால் இரண்டு கண்களையும் மூடிக்கொள்ளவும்இவ்வாறுஒருநிமிடத்துக்கு ஒரு முறை என ஐந்துமுறை செய்யவும்.

# மருத்துவ விளக்கம்

### ஒளியில் படிக்கும் பயிற்சி

மெழுகு வர்த்தி ஒளியில் எந்தத் தொலைவில்எழுத்துக்களை நன்றாகப் படிக்க முடிகின்றதோ அந்தத் தொலைவுக்குத் தலையை வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒவ்வொருவரிக்கும் இரண்டு முறை கண்களைச் சிமிட்ட வேண்டும். தலையை ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்கு கொண்டு செல்லவும். இப்படி இரண்டு முதல் ஐந்து நிமிடங்கள் வரை செய்ய வேண்டும் இது கிட்டப் பார்வையுள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# சேர். பொன். இராமநாதனின்,

# பணிகளை மறக்காத யாழ் பல்கலை

## வரலாற்றுப் பேராசிரியர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

சேர்.பொன். இராநாதனின் பணிகளை யாழ். பல்கலைக்கழகம் ஏற்றுக் கொள்கின்றது. அங்கீகரிக்கின்றது என்பதன் அறிகுறியாகயாழ். பல்கலைக்கழகம் பொருத்தமான இடத்தில் ஒரு வெண்கலச்சிலையை அமைக்கவேண்டும். அவரது குருபூசை தினத்தினை பல்கதலக்கழகம் உத்தியோக பூர்வமாகக் கொண்டாடவேண்டும். சேர். பொன். இராமநாதனின் நூல்களைப் பல்கலைக்கழகம் பதிப்புரிமை பெற்று வெளியிடல் வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர். சி.க.சிற்றம்பலம் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இந்துமன்றம் ஸ்ரீபரமேஸ்வராக்கல்லூரி ஸ்ரீபரமேஸ்வரன் ஆகிய பரிபாலனசபைஇணைந்துநடாத்திய சேர். பொன். இராமநாதன் நினைவு தின வைபவத்தில் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக இந்து மாமன்றத் தலைவர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில்பேராசிரியர். சிற்றம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இலங்கை முழுவதில் இருக்கின்ற எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒருபெரியார், சேர். பொன். இராமநாதன் மட்டுமே. இதற்குமுன்எந்தவொரு தமிழ் தலைவரும், சிங்கள தமிழ்த் தலைவர்களால் ஏகோபித்த நிலையில் போற்றப்படவில்லை. அவர் கொழும்பில் வாழ்ந்திருந்த போதிலும் கூட யாழ்ப்பாணத்தைப் பற்றியே சிந்தித்தவர். இலங்கையில்பலஅரசியல் தலைவர்களைப் பார்க்கின்றோம். ஆனால்அரசியலையும் ஆத்மீகத்தையும் ஒன்றாக இணைத்த பெருமை இராமநானுக்கு மட்டுமே உண்டு. ஏனையவர்களிக்கு அந்தப் பெருமை இல்லை.

சேர். பொன். இராமநாதனுடைய சொத்துதமிழ்மக்களின் சொத்து இதனைப் க்குவமாகப்பாவிப்பது எமது பொறுப்பாகும். எமது கலாச்சாரப் பாரம்பரியத்தை நாம் சரியாகப் பின்பற்றிவிழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். இராமநாதனின்பல்கலைக்கழகத்தில் வாழ்கின்ற நம் சகலதுறைகளிலும் புலமை பெற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அது தான் நாம் அவருக்குச் செய்கின்றபெரும் தொண்டாகும் என்றார்.

இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின்துணைவேந்தர் பேராசிரியர். பொன. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றும்போது சேர். பொன். இராமநாதன் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டுள்ளார் அந்நியர் ஆட்சிக்காலத்தில் தமிழும் சைவமும்பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது. பின்பு அதில் வனர்ச்சி ஏற்பட

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா பகுதி வீடொன்றில் இருந்து 6 கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்காஎவரிவத்தையில் உள்ள வீடொன்றில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன ரக கைக்குண்டுகள் இரண்டு உட்பட ஆறு கைக்குண்டுகளைப் பொலிசார் மீட்டுள்ளனர்,

இக் கைக்குண்டுகளை வைத்திருந்ததாக ஜயசிங்க ஆராச்சிகே பிரதீப் என்ற சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர் பாதாள உலகக் கோஷ்டியினருடன் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-உ)

## தமிழக மீனவர் ஒருவர் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

மன்னார்க் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இந்திய மீனவரொருவரைத் தாம் கைதுசெய்துள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படிமீனவர் இராமேஸ்வரத்திலிருந்து தமது சகாக்களுடன் தொழிலுக்காகச் சேர்ந்து புறப்பட்டதாகவும், தமக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக தன்னைப் படகிலிருந்து கடலிலேதள்ளி விட்டு தனது சகாக்கள் சென்றுவிட்டதாகவும் அம் மீனவர் தெரிவித்ததாக பிரிகேடியர் பிறேனத் கருணாரத்தினவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப மீனவர் பற்றி மன்னார் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## 7300 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

(கொழும்பு)

2000/2001ஆம் ஆண்டுக்கான உயர்கல்விக்குத் தெரிவான மாணவர்களில் 7300 பேருக்கு மகாபொல புலமைப்பரிசில்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப்புலமைப்பரிசில்களை வழங்க உள்நாட்டு வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ரவூப்ஹக்கீம் உத்தரவு வழங்கியுள்ளார்.

புதிய கல்வி ஆண்டிற்காக நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும், அரச உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதி பெறும் மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (வ)

## மின்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை ஏற்றத்தை அடுத்து அடுத்த மாதம் முதல் மின்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இந்த மின்கட்டண அதிகரிப்பு 10 சத வீதம் வரை இருக்குமென நீர்ப்பாசன எரிபொருள் மின்சக்தி அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வ)

## பரவலான ஷெல் தாக்குதல்

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் பரவலான ஷெல் தாக்குதல்கள் நேற்று காலை முதல் மாலை வரை இடம்பெற்றுள்ளதாக தெரிவிககப்படுகிறது.

இதேவேளை நேற்று நண்பகல் தென்மராட்சியில், தனங்கிளப்பு, கோயிலாக்கண்டிப் பகுதிகளை நோக்கியுத்த விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை மேற் கொண்டதாகவும் வேவு விமானம் ஒன்று தாழப் பறந்து நோட்டமிட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (ம-110)

### விடுதலை...

வழிஏற்பட வாய்புண்டு எனவும் மேற்குலக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் புத்தாண்டில் அரசு-புலிகள் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படக் கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் இதற்குமுன்னேற்பாடாக புலிகளின் தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### புலிகள்..!

சிங்கராசா பவானி
[யாழ்ப்பாணம்]
ஆகிய போராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [ம]

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
கமலஹாசன்
அர்ஜுன், நாசர்,
நடிப்பில்
குருதிப்புனல்
நேரடிD
0.30 2-30 (ப·நேரம்)
[கி-688]

### தொழில்நுட்ப..

திறந்த பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து மாணவனை விடுதலை செய்யுமாறு கோரி வந்தனர்,

இதனையடுத்து யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் பிரஸ்தாப மாணவனின் விடுதலை தொடர்பாக படைத்தரப்போடுதொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

மாணவனின் விடுதலையை அடுத்து பகிஷ்கரிப்புபோராட்டம் கைவிடப்பட்டுமாணவர்கள் மீண்டும்விரிவுரைகளுக்கு சென்றனர்.

இதேவேளை பிரஸ்தாப மாணவனுடன்படையினரால் கைது செய்யப்பட்ட கணபதி பொன்னம்பலம் (வயது 45) என்பவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டார். (இ-ச12)

### படைக்கு..

இணைந்ததாகவும் இவர்களில் மூவாயிரம் பேர் இராணுவப் பயிற்சிக்கென அனுப்பப்பட்டிருப்பதாகவும் படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

நாடு முழுவதிலும் 500 நிலையங்களில் இவ் ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஜெகன் எம்.பியுடன் சந்திப்பு

### பல்வேறு பிரச்சினை குறித்து ஆராய்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மீனவர்கள்எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரனுடன் கலந்துரையாடினர்.

இத் கலந்துரையாடலில்

★யாழ்.கடலேரியில் மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்படும் கடல் எல்லை நீடித்தல்.

★ குடாநாட்டு மீனவர்கள் இரவு வேளை கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்படுதல் ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

வலிகாமம் வடக்கு வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதி மீனவத் தொழிலாளிகள் மீளவும் தமது சொந்த இடத்தில் குடியேறி, சுதந்திரமாக வாழ்வதற்கு உரியநடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர் சுதந்திரமாக, தமது சொந்தப் பிரதேசத்தில் தொழில் செய்யும் வரை வழங்கப்பட்டு வரும் நிவாரணம்தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமெனவும், தொழில் இழப்பு கொடுப்பனவு வழங்கப்படாத கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் மற்றும் வடமராட்சி கிழக்குப்பகுதி கடற்றொழிலாளருக்கு அதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கலந்துரையாடலின் போது மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது. (இ

## யாழ்.குடாவில் 'டெங்கு' அபாயம் சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

கிழக்குமாகாணத்தில் வேகமாகப்பரவிவரும் ''டெங்குக் காய்ச்சல்'' யாழ். குடாநாட்டிலும் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி (செல்வி) உமா சிவபாத சுந்தரம் எச்சரித்துள்ளார்.

இன்றைய டெங்கு ஒழிப்பு தினத்தையொட்டி வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே அவர் மக்களுக்கு டெங்கு அபாயம் பற்றி எச்சரிக்கை செய்துள்ளார்.

டெங்கு நோய்க்காவியான நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதன்மூலமும் நீர்த்தேக்கங்களில் நுளம்பு பெருகுவதை தடுப்பதன் மூலமும் இந்நோய் அனர்த்தத்தை தடுக்க முடியும்.

இந்நோய் எதிர்ப்பு சக்தி யாழ். மக்களில் இல்லை. ஏனெனில்இதுயாழ் குடாவை பொறுத்தளவில் புதியநோய். எனவே இந்நோய்தாக்கம் பரவுமேயானால் நோயாளியைக் காப்பாற்றுவது பெரும் சிரமமாகும்.

இக்காய்ச்சல் சாதாரண காய்ச்சலாக ஏற்பட்டு இருதயத்தை தாக்கும் தன்மை உடையது என்றும் அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## க.பொ.த. உயர்தரபரீட்சை முடிவுகள் 7வீதத்தினருக்கு பல்கலை அனுமதி

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஐம்பது சத வீதமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிபெற தகுதி பெற்றிருந்த போதும், ஏழு வீதமான மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யயப்படவுளளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை ஒரு இலட்சத்து 83,439 மாணவர்கள் தேற்றியுள்ளனர் இவர்களுள் ஒரு லட்சத்து 9706 மாணவர்கள் புதிய பாடத்திட்டத்தின் கீழும் 73,733 மாணவர்கள் பழைய பாடத்திட்டத்தின் கீழும் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இவர்களில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 54083 சத வீதமானவர்களும், புதிய பாடத்திட்டத்தின்கீழ் 46075 சதவீத மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

பழைய பாடத்திட்டத்தில் தோற்றிய மாணவர்களில் 139 பேர் 4 அதிவிஷேட சித்தியையும் (ஏ) மூன்று பாடங்களுக்கு தோற்றியவர்களுள் 879 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் அதிவிஷேட சித்தி (ஏ) பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பரீட்சை முடிவுகளின் படி 91,589 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத்தகுதி பெற்றுள்ளனர் இவர்களில் 12 ஆயிரம் மாணவர்கள்மாத்திரமே பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## நாடளாவிய ரீதியில் மறியல்போர் முன்னெடுத்துச்செல்ல ஜே.வி.பி.முடிவு

(கொழும்பு)

நாட்டில் எழுந்துள்ள புதிய சூழ்நிலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடு தழுவிய மறியற் போராட்டம் ஒன்றினை நடத்த ஜே.வி.பி. முடிவு செய்துளளது.

விலைவாசி உயர்வு இனப் பிரச்சினைத் தீர்வுக்கான மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இம் மறியல் போராட்டம் இடம் பெறவுள்ளது.

கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முடிவதற்கிடையில் மறியல் போராட்டம் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

### மூன்று ..--

ரணை நீதிவான் ந. யோகசிகாமணி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஒவ்வொரு சந்தேக நபரும் சரீரப் பிணையில் செல்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிராங்பெர்னாண்டோ, இந்திகஞானசிறி, பிரியந்த குமார ஆகிய மூவருமே பிணையில் விடப்பட்ட இராணுவத்தினர் ஆகும்

யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்த மூவரும் யாழ். சிறைச்சாலை அதிகாரிகளினால் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். [வ]

### லங்காமுடித்த..

யத்தில் கூடுமாறும், இவர்களுக்கான பயணச் சீட்டுக்கள் சிங்கள மகாவித்தியாலயத்தில் வைத்துகாலை 10 மணிக்குப்பின் பகுதிபகுதியாகவழங்கப் படுமெனவும், பயணச் சீட்டுப்பெறுபவர்கள் நேரில் வரவேண்டுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது, இதேவேளை லங்கா முடித்த கப்பல் இன்னும் இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென்பதும்குறிப்பிடத்தக்கது [ந]

### தேடுதல்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வீதியில்நேற்று காலை 7.00மணியளவில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

### திருத்தம்

1 - 12 - 2000 அன்று வலம்புரியில் தொழிலாளர் கல்வி டிப்ளோமா 2000/2001, என்ற விளம்பரத்தை தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி 2000/2001 என திருத்தி வாசிக்கவும்.

- பதிவாளர் -

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.